மலர் 7 இதழ் 10

# வெற்றிமணி

சிறுவர் மாத இதழ்

## சுதந்திரத்தைக் காப்போம்

நல்ல ஈழத் தேவீ
நம்மைப் பெற்ற தாயே
வெல்க வெல்க வெல்க
வெற்றி வளர்க வாழ்க!

பழமை வாய்ந்த புகழும்
பண்பும் மேன்மைக் கலையும்
அழகும் மிக்க வளமும்
அமைந்த ஈழத் தாயே!

எங்கள் கல்வி கேள்வி
எங்கள் ஆற்றல் ஆர்வம்
இங்கு கூட்டி நின்னை
ஏற்றி நாம் வளர்ப்போம்!

துணிவு கொண்டு உழைப்போம்
சுதந்திரத்தைக் காப்போம்
பணிவு கொண்டு வெல்வோம்
பாரில் ஓங்கி நிற்போம்!

வி. கந்தவனம்

கௌரவ ஆசிரியர் :
மு க. சுப்பிரமணியம்

15-2-70 சதம் 30

நங்கையர் விரும்பும் நவநாகரீக
★ நகைகளுக்கும் ★ வைரங்களுக்கும்
புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

# கே.என்.எம்.மீரான் சாஹிப்

''தங்கப்பவுண் நகை மாளிகை''

கன்னாதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்

*Visit*

# K. N. M. MEERAN SAHIB

JEWELLERS & DIAMOND MERCHANT

"SOVEREIGN PALACE"

**KANNATHIDDY** *Dial:* 585 **JAFFNA**

## சிற்பங்கள் தேவையா?

★ மரச் சிற்பங்கள்! ★ பொம்மைகள்!

★ தேர்க் கட்டைகள்

★ வெள்ளெருக்கன் வேரில் சிறிய விநாயகர்

மற்றும் பல்வேறு அழகான சிற்பங்களைப் பெற
இன்றே எமக்கு எழுதுங்கள்!

**சிற்பி நெல்லையப்பர்,**
திருப்பாலைத்துறை, பாவனாசம், P. O.
தஞ்சை மாவட்டம், தமிழ்நாடு.



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# ⁕ வெற்றிமணி ⁕

## வருட சந்தா

பொங்கல் மலர்

தபாற்செலவுட்பட

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா. | 4-00 |
| இந்தியா | ரூபா. | 4-00 |
| மலாயா | $ | 4-00 |

⁕ ⁕

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா. | 75-00 |
| உள் அட்டை | ரூபா. | 60-00 |
| முதற் பக்கம் | ரூபா. | 50-00 |
| உட் பக்கம் | ரூபா. | 40-00 |

தொடர்ந்து விளம்பரஞ்செய்யின்

15 வீதக் கழிவுண்டு

விபரங்களுக்கு எழுதுக

வெற்றிமணி

முள்ளியவளை — இலங்கை

## பொருளடக்கம்


தலையங்கம் ... ... ... ... 3

ஈதோ சாமி எழுந்து தேர் வாறார்! 4

உழுதுண்டு வாழ்வாரே வாழ். 6

வெள்ளெருக்கன் வேரில் விநா. 9

படிப்பித்தல் முறையிற் தண்டனை 13

கணக்கியலுக்கோர் அறிமுகம் 15

நம் சூழலே நம் விரோதிகள் 19

குழந்தைகளை வளர்ப்பதிற். 21

உழைக்காமல் உயரமுடியாது 23

பொன்மொழிகள் ... ... ... 23

தமிழின் விசித்திரம் ... ... 24

கவிதை அரங்கம் ... ... ... 26

வெட்கமடைதல் ... ... ... 29

நேயர் குரல் ... ... ... ... 30

இரு நூல்கள் ... ... ... ... 31

கட்டுரைப்போட்டி முடிவுகள் ... 32

# — வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள்மொழி நலமுற ஒலித்திடுவாய்

| மலர் 7 | 15-2-70 ஞாயிற்றுக்கிழமை | இதழ் 10 |
|---|---|---|


## அன்புத் தம்பி தங்கைகளே!

கட்டுரைப்போட்டிக்கு எதிர்பார்த்ததைவிடப் பல கட்டுரைகள் வந்துசேர்ந்தன. யாவும் தரமானவை. பரிசுக்குரிய கட்டுரையைத் தேர்ந்தெடுப்பதில் மத்தியஸ்தர் குழுவுக்கே சிரமமேற்பட்டது. சிறுவர்களை எழுதத் தூண்டும் பணியில் வெற்றிமணி வெற்றி கண்டுள்ளது என்பதற்கு இக் கட்டுரைப்போட்டியே சான்றாகும். பரிசுத்தொகை பிரதானமன்று. பரிசு பெறுவதுதான் முக்கியம். சித்திரை மாத இதழில் கதைப் போட்டி பற்றிய விபரங்கள் வெளியிடப்படும். மாணவர் மன்றத்தில் அங்கத்தவர்களாக உள்ளவர்களே பங்குபற்ற முடியும். எனவே ஆயிரக் கணக்கில் மாணவர்கள் அங்கத்தவராக வேண்டும். அங்கத்தவராகவுள்ள ஒவ்வொருவரும் குறைந்தது பத்து அங்கத்தவர்களையாவது சேர்த்து ஆதரவு கொடுக்கவேண்டும். குழந்தைகளுக்குத் தரமான பத்திரிகை ஒன்று இலங்கையில் இல்லையே! என்ற குறையை வெற்றிமணி நீக்கிவிட்டது. 31-1-70இல் யாழ் நகர மண்டபத்தில் அமரத்துவம் என்ற நூல் வெளியீட்டுவிழாவில் யாழ் இலக்கிய வட்டத் தலைவர் திரு. வி. கந்தவனம் வெற்றிமணியின் சேவையைப்பற்றிக் குறிப்பிட்டதிலிருந்து வெற்றிமணியின் வளர்ச்சி அறியக்கூடியதாகவிருக்கின்றது. எதிர்வரும் சித்திரை மாதம் தொடக்கம் வெற்றிமணி யாழ் நகரிலிருந்து வெளியாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

— ஆசிரியர்

* *

# ஈதோ, சாமி! எழுந்து தேர் வாருர்

—:— 'இரசிகமணி' கனக. செந்திநாதன் —:—

பிரபலமான கோவில்களிலே தேர்த் திருவிழா நடக்கும் போது தேர்வரும் காட்சியைப் பார்த்திருப்பீர்கள். அடியார்களின் 'அரோகரா'ச் சத்தத்துடன் பக்தர்கள் அங்கப் பிரதக்ஷணம் செய்ய, அன்பர்கள் வடம் தொட்டிழுக்கக் குன்றம் என அசைந்து பார்ப்போரைப் பரவசத்திலாழ்த்தி வரும் தேர்க் காட்சி அற்புதமாகவிருக்கும். புகழ்பெற்ற மாவைக் கந்தன் ஆலயத்திலே ஐந்து தேர்களும் வரும் அழகு, வர்ணனைக் கடங்காதது. நல்லைக் கந்தனின் சித்திரத் தேர்க் காட்சி பரவசமூட்டக் கூடியது. சந்நதி முருகனின் ஆலயத்தில் வேல் தேர் வரும்பவனி கண்டோரை மெய் மறக்கச் செய்யும். அவற்றைப் பல புலவர்கள் அழகு சொட்டப் பாடியுள்ளார்கள். ஆனல், நான் சொல்லப் போகும் தேர்க் காட்சி அப்படியான தேர்க் காட்சியன்று. சின்னஞ் சிறுகுழந்தைகள் தென்னங்குரும்பையிற் தேரொன்றைக் கட்டியிழுக்கும் காட்சியைப்பற்றிச் சொல்லப்போகிறேன். ஒரு கவிஞர் அந்தக் காட்சியை மனத்தில் நின்று நிலைக்கக்கூடியதாகப் பாடியுள்ளார்.

முந்திய நாள் தங்களுடைய ஊர்க் கோவிலிலே தேர் இழுத்த காட்சியைப் பார்த்த சிறுவர்களுக்குத் தாங்களும் தேர் ஒன்று செய்து இழுக்கவேண்டும் என்ற ஆசைபிறந்து விட்டது. அவர்களாற் பெரிய தேர் செய்யமுடியுமா? முடியாது. எனவே தென்னங் குரும்பைகளை ஓடிஓடிப் பொறுக்குகிருர்கள். அவற்றில் நல்ல குரும்பைகளைத் தெரிந்தெடுக்கிருர்கள். பல ஈர்க்குகளை எடுத்து அளவாக முறித்துக் கொள்கிருர்கள். குரும்பைகளின் பல பக்கங்களிலும் ஈர்க்குகளைக் குத்தி மேற்பாகத்தைச் செய்து 'முடி'க்காக ஒரு குரும்பையைக் குத்தி ஒரு பையன் முடித்துவிட்டான். ஒரு பையன் அடிப்பாகத்தை முருக்கஞ் 'செத்தல்'களினுலும் ஓலைச் சில்லுகளினுலும் செய்து தயாரித்துவிட்டான். இன்னெரு பையன் வர்ணக் காகிதங்களினுல் ஒட்டி மலர்மாலைகளைக் கட்டி அழகுபடுத்திவிட்டான். நடுவிற் சாணத்தினுற் பிடித்த பிள்ளையார். ஆஹா, ஈதோ, சாமி! எழுந்து தேர் வாருர்:

''தென்னங் குரும்பை தெரிந்துதான் எடுத்தே
அன்னதன் மேலே அளவுடை ஈர்க்கை
அமைவுறக் குத்தி அழகுறச் சிறுதேர்
பூப்பல சூடி புனைந்தினி தியற்றி
நாப்பண் கடவுளை நலமுடன் ஏற்றி''

பிள்ளைகள் தேரை இழுக்கிறார்கள். கவிஞர் குழந்தைகளின் வாய்மொழியை அப்படியே போட்டு இக் கவிதையை உயர்த்தியுள்ளார். பழகு தமிழ்ச் சொல்-கிராமிய மொழி உயிர்த் துடிப்போடு விழுந்திருக்கிறது:

காகா டுண்டுண் காகா டுண்டுண்
ஈதோ சாமி எழுந்து தேர்வாறார்
காகா டுண்டுண் காகா டுண்டுண்
அம்மா வழிவிடு ஆத்தைநீ விலகு
காகா டுண்டுண் காகா டுண்டுண்
என்றே இயம்பி ஏருறு தேரினை
கட்டிய இழையாற் பற்றி இழுத்து,

விளையாடுகிறார்கள்.

'அம்மா வழிவிடு; ஆத்தைநீ விலகு' என்ற தொடரும் 'காகா டுண்டுண்; காகா டுண்டுண்' என்ற தொடர் மீண்டும் வருவதும் அழகாக இருக்கின்றன. பாடல் நல்ல உருவம்பெற்று நம் கண்முன் நடப்பதுபோல இருக்கிறது. இப்படி வல்லிபுரக் கோவிற் சவாரிக் காட்சி, பருத்தித்துறைக் காட்சி, காவடி ஆடும் காட்சி, விறகு சுமக்கும் பெண்களின் நடைக் காட்சி என யாழ்ப்பாணத்துக்கே உரித்தான பல காட்சிகளை நிதர்சன இலக்கியத்துக்கு உதாரணம்போல ஒரே நூலிற் காண ஆசைப்படுகிறீர்களா? ''காதலி ஆற்றுப் படை'' என்ற கவிதை நூலைப் படித்துப் பாருங்கள். அதை இயற்றியவர் பாமரமொழியில் - நாட்டுப் புறத்துக் கொச்சையிற் பல நாடகங்களை ஆக்கி வெற்றிபெற்ற பேராசிரியர் டாக்டர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் ஆவர்.

| *
* |

பரிசுக் கட்டுரை

# உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்!

செல்வி தெய்வநாயகி பொன்னுத்துரை

**ம**னிதருக்கு உணவு, உடை, உறையுள் இம் மூன்றும் இன்றியமையாதனவாகும். இவற்றுள் உணவே மிக முக்கியமானது. பெருந் தேசப் பரப்பைக் கட்டியாளும் அரசனுக்கும், உலகில் ஊசி நிலந்தானும் உரிமையற்ற ஆருமற்ற ஆண்டிக்கும் உணவே முக்கிய தேவையாகும். எறும்புமுதல் யானையீருகவுள்ள எல்லா உயிர்களும் உணவுக்காகவே உழைக்கின்றன. ''நாழி அரிசிக்கே நாம்'' என்பதும் ''உண்டி முதற்றே உணவின் பிண்டம்'' என்பதும் உணவின் முதன்மையை வலியுறுத்தும் அறிஞர் வாக்குகளாம். இவ்வாறு உலகிலுள்ள உயிர்கட்கெல்லாம் இன்றியமையாததாகிய இவ் வுணவைக் கொடுக்கும் தொழிலாக அமைந்துள்ளது உழவுத் தொழிலாகும்.

ஒருவர் பிற தொழில்களாற் பொருளெய்தியவிடத்தும் அவர் உணவின் பொருட்டு உழவரிடத்துச் செல்லவேண்டுமாதலின் பிற தொழில்கள் உழவுத் தொழிலுக்குப் பின்னவையே. எனவே ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றரெல்லாந் தொழுதுண்டு பின் செல்பவர்'' என்றும் ''சுழன்றும் ஏர் பின்னது உலகம்'' என்றும் வள்ளுவப் பெருந்தகை கூறிப் போந்தார். ஏனைய தொழில்கட்குக் கேடுவரும்; உழவுத் தொழிலுக்குப் பழுது வராது. ''உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைக் கண்டீர் பழுதுண்டு வேறோர் பணிக்கு'' என்பதும், ''மேழிச் செல்வம் கோழை படாது'' என்பதும் இவ் வுண்மையை வலியுறுத்துவனவாகும்.

கல்வியிற் சிறந்த கம்பரும் உழவுத் தொழிலைச் சிறப்பித்து 'ஏர் எழுபது' என்னும் நூலை எழுதியுள்ளார். அறிவிற் சிறந்த ஔவையும் ஆத்திசூடியில் 'நெற் பயிர் விளை' ''பூமி திருத்தி யுண்'' ''பருவத்தே பயிர் செய்'' என்றும் கொன்றைவேந்தனில் ''சீரைத் தேடின் ஏரைத் தேடு'' ''தொழுதூண் சுவையில் உழுதூண் இனிது'' என்றும் உழவுத் தொழிலைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். உழவுத்

தொழில் சிறந்ததாதலின் அத்தொழிலைச் செய்யும் உழவரையும் சிறந்தோராக உலகம் மதிக்கும். ''உழுகுலத்திற் பிறந்தாரே உலகுய்யப் பிறந்தார்'' ''உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தாரே'' ''ஓதுவார் எல்லோரும் உழுவார் தம் தலைக் கடைக்கே'' என்பனபோன்ற புலவரது மணி வாக்கியங்கள் உழவர்தம் மேன்மையை அங்கை நெல்லிக் கனியெனத் தெளிவாகக் காட்டுவனவாகும்.

செழிப்பான ஆற்றோரங்களில் நிலைத்திருந்து அங்குஉழுது பயிர்செய்து வாழ்க்கையை நடாத்தத் தொடங்கிய மனிதரிடமே முதன்முதலில் நாகரீகம் வளரத் தொடங்கியது. எனவே, உழவுத் தொழிலாலேயே உலகில் நாகரீகம் முளைத்து வளரத் தொடங்கியதென்றால் மிகையாகாது. பழம்பெரும் நாகரீகம் படைத்த தமிழகத்திலேயே இத் தொழில் மிகப் பழமையானது என்பதற்கு எத்துணையும் ஐயமில்லை. பண்டைக் காலத்தில் நம் நாடும் அதிக விவசாயம் செய்ததைச் சரித்திர ஆசிரியர்களாகிய தலாமி, பிளினி என்பவர்கள் தங்கள் நூல்களிற் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம் நாடு அதிக உணவை ஏற்றுமதி செய்ததைப் பட்டினப்பாலையென்னும் நூல் ''ஈழத் துணவும் காளகத் தாக்கமும்'' என அழகாக எடுத்தாளுகிறது.

அக் காலத்தில் நாடுகாத்த வேந்தர்களும் உழவின் பெருமையையறிந்து 'காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம்பெருக்கினர். உழவர் குடியை உயர்த்தி அவர்கட்குச் சிறப்புச் செய்து புரந்து வந்தனர். எல்லா வருணத்தாரும் ஏத்த உரிமை வாழ்க்கை வாழ்ந்த வேளாண் மாந்தர் இப்போது உத்தியோகப் பித்துப் பிடித்து எழுச்சி குன்றி, உயர்ச்சியின்றி வாழ்கின்றனர். பிற தேசங்கட்கு உணவு அனுப்பிவந்த இந்த நாடு உணவுவேண்டி வேற்றுத் தேசங்கட்கு 'அன்னக் காவடி' எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

இன்றைய அரசாங்கம் பண்டைய நிலையை நம் நாடு அடையவேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காக எத்தனையோ இலட்சக் கணக்கான ரூபா செலவில் விவசாய விருத்தியைப் பெருக்கக் காடுகளைத் திருத்தி விவசாயிகளைக் குடியேற்றியும், பாழடைந்த குளங்களையும், வாய்க்கால்களையும்

திருத்தி நீர்ப்பாசனத்தைப் பெருக்கியும், அவர்களுக்கு வேண்டிய விதை, உரம், கருவி என்பவற்றைக் குறைந்த விலையிலும் - இலவசமாகவும் விநியோகித்து வருகின்றது.

எனினும், படித்த வாலிபர் உழவுத் தொழிலை உவந்து அதிலீடுபட முன்வருகிறாரிலர். இத் தொழில் உழைப்புக் கூடியும், ஊதியம் குறைந்தும், மதிப்புப் பெருமலுமிருப்ப தால் எவரும் அதை நாடத் தூண்டப்படவில்லை. உழவோரை உயர்த்தி அவர்களுக்கு வேண்டுவன வெல்லாம் உதவி அவர்களை மற்றோர் மதிக்க வாழச்செய்யவேண்டும். உழவோர் உயர உணவு பெருகும்; நாடு நன்மை அடையும்; பசி-பிணி ஒழியும்; சந்தோஷமும் - சமாதானமும் நிலைக்கும். எனவே, ''இரப்போர் சுற்றமும், புரப்போர் கொற்றமும், உழவிடை விளைப்போர்'' என்பது வெள்ளிடைமலை!

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்!''

- பாரதி


## வாய்வு சூரணம்

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண பித்த வாய்வுகள், கை கால் இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு-வயிற்று வலிக்குச் சிறந்தது. (பத்தியமில்லை)

150 கிராம் டின் ரூபா. 4-00

(தேவைக்கு எழுதவும்)

## வீரகேசரி மாத்திரை

ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும் உறுப்புக்கு உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்

100 பில்ஸ் ரூ. 25; 50—ரூ. 13, 24 - ரூ. 7. (மெழுகு ரூ. 4)

(பார்சல் சார்சு தனி)

**பண்டிட்: S. V. R. கண்டர் சன்ஸ் R. I. M. P.**

அரிசிப்பாளையம், சேலம் - 9. (S. I.)

கிடைக்குமிடங்கள்:-

(1) ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, சிலோன் (2) அமிர்தலால் அன் கோ. (மெடிக்கல் ஸ்ரோர்ஸ்) 146, நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை- 3. (3) ராஜா மெடிக்கல், 31, தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர் கண்ட். (4) வல்லராம் 188 A, தாராவிரோடு, பம்பாய்-17

செடியோ கிடைப்பது அரிது. அப்படியே பத்துப் பதினைந்து ஆண்டுகள் சென்ற செடியின் வேர் கிடைத்தாலும் அதன் பருமன் மூன்றங்குல சுற்றளவுதான் இருக்கும். அந்த வேரைக் கொஞ்சம் கொஞ்சமாகச் செதுக்கவேண்டும். அது காயக் காயத்தான் அந்த வேரில் வேலை செய்யமுடியும். என்னுடைய தந்தையார் அந்த வேரில் விநாயகர் செய்வதற்கு முன்னேயே அவரும் ஒரு தடவை பூசை செய்வார். முதலிற் பட்டை நீங்கி நெட்டித் தக்கைபோற் காட்சியளிக்கும். அப்புறம் சிறு சிறு உளிகளை வைத்துக்கொண்டு அதை எந்த அளவில் எப்படி உருவம் அமைக்கலாம் என்று ஆலோசனையிடுவார்.

வேரோ கிடைப்பது அரிது. அதனால் மிகவும் கவனமாகவும்' சேதாரமில்லாமலும் செய்யவேண்டும். பெரிய உருவங்களைச் செய்வதற்கும், இந்த வேரிற் செய்வதற்கும் பல சிக்கலான பிரச்சினைகள் எழக்கூடும். வேர் சரியாக இல்லையென்று தள்ளி விட்டுவிடவும் முடியாது. அதிலேதான் செய்தும் ஆகவேண்டும். இது வேரானதால் ஆங்காங்கே நார் இருக்கும். உருவமோ மிகச் சிறிய அளவில் ஒரு அங்குலம் அல்லது இரண்டங்குலம் அளவிற் செய்தாக வேண்டும். இதற்கான மயிரிழைபோல் ஆயுதங்களும் வைத்துக்கொள்ள வேண்டும். வேரை உற்று உற்றுப் பார்த்துச் செய்யும்போது கண்கள் பூத்துவிடும். கீழே வைத்துக்கொண்டும் செய்யமுடியாது. கைகளிலேயே வைத்துக்கொண்டு பார்த்துப் பார்த்துச் செய்யவேண்டும். வேர் ஈரமாயிருந்தால் நாம் செய்யும் உருவம் வெடிக்க ஆரம்பித்துவிடும். அதனால் வேர் சுருங்கச் சுருங்கத்தான் வேலையைத் தொடர முடியும். அவசரப்பட்டால் ஒன்றும் நடக்காது. நாள் ஆக ஆக உருவம் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவு பெறும். அதனால் வேரிலிருந்து விநாயகர் உருவம் தோன்ற ஏறக்குறைய ஒரு மாத காலமாகலாம். அதற்குமேற் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மிகச் சிறிய கைக்கடிகாரத்தின் வேலையைப்போன்று மிகத் துன்னியமானதும், பொறுமையோடு செய்யவேண்டியதுமான வேலைகளில் இந்த விநாயகரும் ஒன்று.

பெரிய சிற்பங்களைச் செய்து தரும் சிற்பியார்கள்கூட இம்மாதிரி மிகச் சிறிய உருவங்களைச் செய்ய யோசிப்பார்கள். இதில் செலவு செய்யும் நேரத்தை வேறொரு காரியத்தில் செலவுசெய்தால் நல்ல பலன் கிட்டும் என்பதைக் கருதித்தான் அவர்கள் இந்த வேலைக்கு முன்வருவதில்லை. அப்படியே முன்வந்தாலும் இந்த வேலைக்கென்று பயிற்சியிருந்தாற்றான் நன்கு புரிந்து செய்யமுடியும். இல்லாவிட்டாற் பார்ப்பவர்கள் அதைப்பற்றிப் பல குறைகள் சொல்லிவிட்டுப் போய் விடுவார்கள். வேர் சிறந்த முறையில் இருந்தால்தான் அமைப்பும் பொருத்தமாக அமையும். சிற்பியின் திறமையை அங்கே ஒன்றும் அப்படி இப்படியென்றும் காட்ட முடியாது. ஒரு அங்குலத்தில் முகம் அமைக்கவேண்டுமென்றால் அந்த ஒரு அங்குலத்தில்தான் முகத்தை

அமைத்தாக வேண்டும். அங்கே வேரின் முடிச்சு இருக்கிறதே என்றால் அதற்குத் தகுந்தாற்போல முகத்தை அமைக்கும் திறமையும் வேண்டும். இல்லாவிட்டாற் சிற்பம் ஒன்றுஞ் சிறக்காது. வேரா யிருப்பதால் பல திசையிலும் திருப்பித் திருப்பித்தான் உருவத்தைச் செய்யமுடியும். வேரில் முகஞ் செய்ய இடமிருக்கும்; கால் செய்ய இடமிருக்காது. இதற்கெல்லாம் ஒட்டுவைத்தும் செய்யமுடியாது. அதையெல்லாம் கருத்திற் கொண்டுதான் வேரில் விநாயகர் செய்து கொடுத்துக்கொண்டு வருகிறார் என்னுடைய தந்தையார் அவர்கள். அவருக்கு இன்றைய வயது எழுபது. இன்றும் இப்படிப்பட்ட வேலைகளைக் கண்ணாடி போடாமல்தான் செய்துவருகிறார். எங்கள் வீட்டிலிருக்கும் சாய்வான கட்டிலிற் படுத்துக்கொண்டேதான் இப்படிப் பட்ட அபூர்வமான சிற்பங்களைச் செய்து கொண்டிருக்கிறார். என்னுடைய மூத்த சகோதரர் திரு. நெல்லையப்பரும் தற்சமயம் அந்தக் கலையிற் தேர்ச்சிபெற்று வருகிறார். அதனால் சிற்பங்கள் செய்வதில் எல்லாவற்றிலும் மேலாக இந்த வேரிற் செய்வதற்கு மிக்க திறமையும், பொறுமையும், தேர்ச்சியும், நிதானமும் வேண்டும். அப்போது தான் விநாயகரை நன்கு பூர்த்தியாகச் செய்யமுடியும்.

வெள்ளெருக்கன் வேரோ கிடைப்பது கஷ்டம். அதில் விநாயகர் செய்து கிடைப்பதும் அபூர்வம். அப்படிப்பட்ட விநாயகரை வணங்கினால் அனைத்தும் சித்திக்கும் என்று பெரியவர்கள் சொல்லி வருகிறார்கள். வெள்ளெருக்கனுக்கும் விநாயகருக்கும் தனிச் சிறப்புண்டு என்பதால்தான் அதில் விநாயகர் மட்டுஞ் செய்யப்படுகிறது. மற்ற உருவங்களையும் அதிற் செய்யலாம். செய்யக்கூடாது என்பதில்லை. இராமாயணத்தில் வரும் ''வெள்ளெருக்கன் சடை......... முடியான்'' என்ற பாடலை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இப்படிப்பட்ட கலையழகு வாய்ந்த சிற்பங்களைச் செய்யும் கலைஞர்களைத் தேடினாலும் கிடைக்கமாட்டார்கள். அதோடு இப்படிப் பட்ட சிற்பங்களைச் செய்வதற்கு ஆகும் நேரமும் காலமும் அதிகம். அதனால் அந்தச் சிற்பங்கள் கிராக்கியாகவே இருக்கின்றன. இதை நாம் சாதாரண அளவுக்குக் கொண்டுவர முடியாது. ஒரு சிற்பத்தை முடிக்கவே ஏறக்குறைய ஒருமாத காலம் ஆகிறதென்றால் அதற்கு செய்கூலி சராசரி என்ன ஆகலாம் என்பதை யாரும் சொல்லத் தேவையில்லை.

பொதுவாக அச்சிலும், வார்ப்பிலும் செய்யப்படும் சிற்பங்களுக்கும் ஒன்று ஒன்றையும் பார்த்துச் செய்யும் சிற்பங்களுக்கும் அதிக வேறுபாடுண்டு. கடையிலுள்ள நூறு பிளாஸ்டிக் பொம்மைகளும் ஒரே அச்சிற் செய்யப்பட்டவை. அதில் உருவம் இருக்கலாம்; அழகு தெரியலாம். அதில் உண்மையான அழகையும் உயிர்த் துடிப்பையும் காணமுடியாது. சிற்பி நேரிடையாகச் செய்யும் சிற்பங்களில் ஒவ்வொரு நேரத்திலும் அந்தக் கலையழகைப் பார்த்துப் பார்த்து உயிரோடு இணைவதுபோல் அந்தச் சிற்பங்களுக்கும் உண்டுபண்ணிக்

# பேனு நண்பர் சங்கம்

உலகத்தின் பலபாகங்களிலு முள்ளவர்களைக் கடிதமூலம் அறிந்துகொள்ளவும், ஒருவர் கஷ்டத்தை மற்றவரிடம் கூறி ஆறுதல் கொள்ளவும், நல்லவர் உறவைப் பெறவும், தங்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் இச்சங்கம் உதவியாக இருக்கும்.

1. சங்கத்தில் சேர 50சத முத்திரை / போஸ்ரல் ஆடர் அனுப்புக.
2. பெயர், முகவரி, வயது இவற்றைவிட அறிந்த பாஷைகள், விளையாட்டுக்கள், பொழுதுபோக்குகள், மற்றும் திறமைகள் ஆண், பெண் இருபாலாரும் கடிதம் எழுதலாமா என்ற விபரங்களை 25 சொற்களுக்கு மேற்படாது எழுதி அனுப்பவும்.
3. தோழர் தோழர்களுக்கும், தோழியர் தோழியர்களுக்குமே எழுதலாம். ஆனல் இருபாலாரும் எழுதலாம் எனக் குறிப்பிடின் எவரும் எழுதலாம்.
4. வயதுக் கட்டுப்பாடின்றி உலகத்தின் எப்பகுதியிலுள்ளவரும் சேரலாம்.
5. தங்கள் புகைப்படங்களை இப்பகுதியில் வெளியிட விரும்புகிறவர்கள் புளக் (Block) அனுப்பவேண்டும். புளக் இல்லாவிடில் புளக்செய்ய புகைப்படத்துடன் ரூ: 7-50 அனுப்பவேண்டும்.

**வெற்றிமணி, முள்ளியவளை, இலங்கை.**

---

# வெற்றிமணி மாணவர் மன்றம்

மாணவர் மன்றத்தில் 22 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சேரலாம். பாடசாலையிற் படிப்பவர்கள் வயதுக் கட்டுப்பாடின்றிச் சேரலாம். விண்ணப்பத்துடன் 50சத முத்திரை அல்லது போஸ்ரல் ஆடர் பிரவேசக் கட்டணமாக அனுப்பவேண்டும். தமிழகத்திலுள்ளவர்கள் வெற்றிமணியிலுள்ள தமிழகப் பிரதிநிதியின் முகவரிக்கு அனுப்புக.

---

## அங்கத்தவர் விண்ணப்பப் பத்திரம்

அன்புள்ள மணி மாமாவுக்கு,

மாணவர் மன்றத்தில் என்னை அங்கத்தவராகச் சேர்க்கவும்.

செல்வன் / செல்வி ..............................

பாடசாலை முகவரி ..............................

வீட்டு முகவரி ..............................

பிறந்த திகதி .............. வயது .............. வகுப்பு ..............

கடிதத்தொடர்பு ஆண், பெண் இருபாலாரும்.

.............................. ..............................

ஆசிரியர் / பெற்றார் கையொப்பம் கையொப்பம்

# வெள்ளெருக்கன் வேரில் விநாயகர்

— பாபநாசம் வீ: ப. க. மூர்த்தி —

சிற்பங்களிற் பலவிதமான சிற்பங்களை நாம் பார்த்திருக்கக்கூடும். அவற்றில் வியப்பானதும், ஆச்சரியப்படக் கூடியதுமான ஒரு விநாயகரைப் பற்றித்தான் நாம் கீழ்க்காணும் கட்டுரையிற் படிக்கப் போகிறோம். அவற்றைப் பிறப்பிக்கும் கலைஞன் சிருஷ்டிக் கர்த்தாவுக்கு ஒப்பாவார்.

பாரத நாட்டிலும், ஏன் உலகிலும்கூட எங்கும் விநாயகர் இருப்பதாகப் பலராலும் சொல்லப்பட்டு வருகிறது. வணக்கத்திற்குரிய முதற் கடவுளாக எண்ணப்படுபவர் விநாயகர்தான். விநாயகர் எப்படித் தோன்றினார்? அவரை ஏன் வணங்கவேண்டும்? என்பதற்காகப் பல கதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றை அனைவரும் அறிந்திருப்பார்கள். நாம் கோயில்களில் உள்ளே நுழைந்தவுடன் காண்பது விநாயகரைத்தான். அவரை வணங்கிவிட்டுத்தான் மற்றவர்களையும் வணங்கவேண்டு மென்பதற்காகத்தான் முதலில் அவரைக் கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள்.

விநாயகர் உருவத்தைக் கருங்கல்லிலும், மரத்திலும், மாக் கல்லிலும், களிமண்ணிலும், மெழுகிலும், அரக்கிலும், உலோகத்திலும் காண்கிறோம். இக்காலத்திற் 'பிளாஸ்டிக்' கிலும்கூடக் காண்கிறோம். எதில் பார்த்தாலும் சிற்பங்களின் கலைத்திறமை ஒன்றுதான். வேறுபாடு கிடையாது என்று பலரும் கருத்துத் தெரிவிக்கிறார்கள். அது சரியானதா என்பதை இந்தக் கட்டுரையைப் படித்துவிட்டு நீங்களே தீர்மானித்துக்கொள்ள வேண்டியதுதான்.

விநாயகர் உருவத்தை மரத்திற் செய்வதாக வைத்துக்கொள்வோம். அப்படிப்பட்ட மரத்தைத் தேர்ந்தெடுக்கும்போது பால் உள்ள மரமாகவே தேர்ந்தெடுப்பார்கள். இலுப்பை, அத்தி இவற்றில் முதலிடம் பெறும். எருக்கன் செடியும் பாலுள்ள வகையைச் சார்ந்ததுதான். இதில் நாம் எங்கும் சாதாரண எருக்கன் செடியைத்தான் பார்க்கமுடியும். இதில் வெள்ளெருக்கன் செடி என்று ஒன்று இருக்கிறது. அந்தச் செடியும் பார்ப்பதற்கு எருக்கன் செடி போலவேயிருக்கும். ஆனால் பூக்கள் மட்டும் வெள்ளை நிறத்திற் காணப்படும். அப்படிப்பட்ட செடிகளைப் பார்ப்பது அரிது. அப்படிப்பட்ட செடிகள் அநேகமாகப் பழங் கோயில்களிலும், நடமாட்டம் அதிகமில்லாத காடுகளிலும் கிடைக்கும். வெள்ளெருக்கன் செடியின் முற்றின வேரைக் கொண்டுவர வேண்டும். இந்தச் செடியின் வேர் நார் குழந்தைகளின் இடுப்புக்குக் கயிறாகவும் பயன்படும். இந்தச் செடியின் வேரைத் தசமி பஞ்சமி நட்சத்திரத்தில் எடுக்கவேண்டு மென்றுஞ் சொல்லப்படுகிறது. அந்த வேரைக் கொண்டுவந்த நபர் ஒருவர் அந்த வேரைச் செடியிலிருந்து எடுப்பதற்கு முன்னேயே நாற்பத்தெட்டு நாட்கள் செடிக்குப் பூசை செய்து எடுத்து வந்ததாகக் கூறினார்.

கட்டுகிறான்: அப்படிக் கட்டிக் கட்டிச் செய்த சிலைகளைக் கொண்டு கட்டப்பட்டு இருப்பதினாற்தான் நம் கோயில்களிற் கலையழகையும் இறையழகையும் இன்றைக்கும் நாம் காணமுடிகிறது: கலையழகு மக்கள் விரும்புமளவுக்கு மலிந்து வந்துவிட முடியாது. மக்கள்தான் கலையழகை நோக்கி நடைபோடவேண்டும்.

இன்றைய உலகில் வெற்றிலை-பாக்குக் கடைக்காரருக்கு இருக்கும் வருமானம் கலைஞர்களுக்கு இல்லை. அதனாற் பல கலைஞர்கள் வயிற்றோடு போராட முடியாமல் கலைக்குச் சீட்டுக் கொடுத்துவிட்டு முடிவு கட்டிக்கொண்டார்கள். சில கலைஞர்கள்தான் கலையை வயிற்றோடு இணைக்காமல் வயிற்றுக்குச் சவால் விட்டுக்கொண்டு கலையையே உயிராகக்கொண்டு வாழ்ந்துவருகிறார்கள். கொலை செய்தவனை அரசாங்கம் காப்பதுபோற் கலை செய்பவனையும் அரசு காக்க முன் வர வேண்டும்.

இன்றுள்ள வாழ்க்கைக்கு இந்தக் கலைகள் தேவைப்படாமல் இருக்கலாம். ஆனால், இவைகளே சரித்திரத்திற் சான்று கூறுமளவுக்கு ஊன்று கருவிகளாகவும் மாறலாம். பழங்காலத்தில் மறைந்திருக்கும் நகரத்தைத் தோண்டியெடுக்கும்போது அங்கு கிடைக்கும் மண் பாண்டங்களும், வீட்டுச் சுவர்களும், கற்களும், தொட்டிகளும் நாகரீகத்தைக் காட்டும்போது ஒரு காலத்தில் இந்தச் சிற்பங்கள் தமிழர்களின் கலையார்வத்தை உலகத்திற்கு எடுத்துச்சொல்ல இதுபோன்ற சிற்பங்களும், கலைஞர்களும் பெரிதும் பயன்படுவார்கள் என்று கூறி முடிக்கிறேன்.

அண்மையில் அமெரிக்காபோன்ற வெளிநாடுகளுக்குச் சென்ற திரு. இரா. சௌந்தரராச மூப்பனார் அவர்கள் (தமிழக சட்டமன்ற உறுப்பினர்) ஒரே ஒரு விரல் பருமனுள்ளதும், சுமார் இரண்டங்குலம் உயரமுள்ளதுமான வெள்ளெருக்கன் விநாயகர் ஒன்றையும் கையில் எடுத்துச் சென்றதைச் செய்தித்தாள் வாயிலாக அனைவரும் அறிந்திருக்கக்கூடும் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.


## வெற்றிமணி கிடைக்குமிடங்கள்

Meenambika News Agency,
235, Lower Street,
BADULLA.

அன்பு புத்தகசாலை,
27-D பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

# படிப்பித்தல் முறையிற் தண்டனையும் ஒன்று?

— மு. கா. கணபதிப்பிள்ளை, பிளாக் பூல், நுவரெலியா. —

ஓர் தேசத்தின், ஓர் நாட்டின், ஓர் கிராமத்தின், வளர்ச்சியின் பெரும்பகுதி அவ்வவ் விடத்தின் பாடசாலை யிலேயே தங்கியிருக்கின்றது. பாடசாலையின் பெரும்பகுதி அப் பாடசாலையின் ஆசிரியர்களிற் தங்கியிருக்கின்றது என் பது யாவருமறிந்த உண்மை. ஏனெனில், எதிர்கால உல கத்தைச் சிருஷ்டிக்கும் சிறுர்களைப் பயிற்றுவது ஆசிரியர் களே.

ஒரு பாடசாலை ஆசிரியர் காட்டிய வழியிலேயே மாண வன் செல்கிறுன். ஆசிரியர் என்னென்ன விதமாகவெல்லாம் செய்கின்றுரோ அவ்வாறே மாணவனும் செய்யப் பழகிக் கொள்கிறுன். ஏன்? பாடசாலை மாணவர்களின் உள்ளத்திற் பின்பற்றூக்கமே முனைந்து நிற்கின்றது. ஆகையால் ஆசிரி யர் தனது இஷ்டபூர்வமான குணங்களை மாணவர் முன் னிலையிற் காண்பித்தல் பெருந் தவறென்பது பெரியோர்கள் நேரிற் கண்ட, பழக்கத்திற் கண்ட, கண் முன் கண்ட உண்மையென்பது யாவருமறிந்த விடயம்.

இஃது இவ்வாறிருக்க, ஓர் ஆசிரியரின் இலட்சணம் எவ் வாறிருத்தல் வேண்டுமென்பதை ஆராய்வோம். ஆசிரியர் படிப்பிக்கும் தொழிலிலே மிகுந்த பற்றுடையவராய் இருத் தல் வேண்டும். அந்தத் தொழிலிலே இயல்பான ஆசை அவருக்கிருக்குமாயின் அவர் தம்முடைய தொழிலிலே அதிக மாகச் சித்தியடைவர். தாம் பெறும் சம்பளத்தை நோக்கி யும், பெருந் தொகையான மாணுக்கர்களது பிற்காலச் சீவியம் முழுவதும் தம் பொறுப்பிலேயே தங்கியிருப்பதை நோக்கியும், பெற்றேர் தம்மிடத்திலே பிள்ளைகளை அனுப் பும்போது கொண்ட நம்பிக்கைக்குப் பாதகஞ் செய்யலா காதென்பதை நோக்கியும், தம் தொழிலைச் செவ்வையா கச் செய்து வருவாராயின் அதனுல் அவருக்குண்டாகும் இன்பமுங் கீர்த்தியும் மாணுக்கர்களது கல்வித் திறமையும் அவருடைய முயற்சியை ஏற்றுதற்குக் காரணமாகித் தொழி லிலே பற்றை வளர்க்குமென்பது உண்மை.

தொழிலிற் பற்றுள்ள ஆசிரியர் படிப்பிக்கும்போது மாணுக்கரது அறியாமையைத் தமது பகைபோற் கருதி அதை அகற்றுவதையே தம் முழு முயற்சியாகக் கொள்வர். சுத்த வீரன் பகைவனுக்குப் புறங் காட்டாததுபோல நல்லாசிரியர் எந்த மாணுக்கனையும் படிக்கமாட்டாதவனென ஒதுக்கிவிடார். அன்றி, ஒதுக்கிவிடுபவர் பகைவனை எதிர்க்க வலியற்றவனென்று கருதி அவனுக்குப் பணியும் பேடிக்குச் சமமாவர். போரில் வெல்லவேண்டும் என்ற கருத்தை உடையவன் அதற்குவேண்டிய உபாயங்களை ஒன்றன்பின் ஒன்ருய் உபயோகிப்பதுபோல, நல்லாசிரியர் மாணுக்கன் ஒருவனுக்கு ஒரு பாடத்திலே பற்றில்லையாயின் பற்றை உண்டாக்குவது எப்படியென்று சிந்திப்பார். தமது மாணுக்கருடைய மனப்பான்மையை அறிந்து அதற்கிசைய நடந்து அவனுக்குப் படிப்பிற் சிரத்தையை வருவிப்பர்.

இவ்வாருக ஓர் ஆசிரியரின் இலட்சணங்களையெல்லாம் செவ்வனே விரித்துக் காட்டிய ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்ருேர் ஒரு புறமிருக்க, இக்கால ஆசிரியர்களின் நிலை மிகமிக மோசமானதாக இருக்கின்றது. சிலர் தங்களுக்காகவே மாணவர் என்ற கொள்கையினை உடையவர் என்பது வெள்ளிடை மலை. எஞ்சிய சிலர் மாணவருக்காகத் தாம் என்ற கொள்கையினை யுடையவர்.

அடுத்ததைக் காட்டும் பளிங்குபோற் கள்ளங் கபடமற்ற நெஞ்சையுடைய சிறுர்கள் ஒப்படைக்கப்படுகின்ருர்கள். பாடசாலைக்கு வரும்பொழுதே நல்லவனுகவோ, தீயவனுகவோ அவர்கள் வரவில்லை. அன்னுரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான மாணவரின் உடல், உளவிருத்திக்கான விஷயங்களை ஆராய்ந்தறிந்து படிப்பித்தல்மூலம் ஆத்ம சிந்தனையை வளர்ப்பிப்பதும், தேவையானவற்றைத் தேடிக்கொள்ளும் வல்லபத்தைப் பிறப்பிப்பதுமே ஆசிரியரின் தலையாய கடமை.

இதை உணராத ஆசிரியர்கள் பலர் இன்று மலையகத்தில் விளங்குகின்றனர். பாடசாலை பொழுதுபோக்கும் இடமாகவோ மழை, வெய்யிலுக்கு ஒதுங்குமிடமாகவோ காட்சி அளிக்கின்றது.

இக் காலத்திலுள்ள சில ஆசிரியர்களுக்குப் படிப்பித்தல் முறை சிறிதேனும் தெரியாதிருப்பது மிகுந்த துக்க கர மான விடயம். அவர்களுக்குத் தெரிந்த படிப்பித்தல்முறை என்னவென்றால் தண்டனைமுறை யொன்றேயாகும். அதைத் தானும் தக்கவழியிற் பிரயோகிக்கத் தெரியாதிருப்பது மிகுந்த மனவருத்தத்துக்குரிய விஷயம். சில ஆசிரியர்களின் தண்டனை எப்படிப்பட்டது? பிரம்பு பாவித்தல். அதுவும் மாணவரின் உடம்பெங்கும் தளிம்பு படியும்படியே அடித் தல் நடக்கும். அது மட்டுமா? சில ஆசிரியர்கள் தமது திருக் கரங்களினாலே மா ண வ ரி ன் தலை, முகம், நெஞ்சு முதலிய இடங்களில் அடிக்கின்றார்கள்; குத்துகின்றார்கள். "அடியாத மாடு படியாது" என்பதே இவர்களுடைய தாரக மந்திரமாக விருக்கின்றது. இந் நிலை மாறக் கல்வி இலாகாவின் மதிப்பிற்குரிய அதிகாரிகளும், பெற்றோரும் ஆவன செய்வார்களா?

-★-

● சுத்தம் சுகம் தரும்!

★ 'மில்க் வைற்' வெண்மை தரும்!!

○ கந்தையானாலும் கசக்கிக் கட்டுங்கள்! ○

மில்க்வைற் சோப் மேலுறைகளை

அனுப்பிப் பரிசுகளைப் பெறுங்கள்!

மில்க்வைற் சோப் தொழிற்சாலை,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233

# கணக்கியலுக்கோர் அறிமுகம் (20)

—: வை. சி. சிவஞானம் :—

**முடிவுக் கணக்குகளைத் தயாரித்தல்:-**

ஒரு குறித்த கால எல்லைக்குள் நிகழ்ந்த வியாபார நடவடிக்கைகளினதும் அக் கால எல்லைக்குரிய பொறுப்பான வியாபார நடவடிக்கைகளினதும் தொகுப்பிலிருந்து எதிர்காலத்திற்குரிய வியாபார நடவடிக்கைகளின் தொகைகளை நீக்கிவிட்டு எஞ்சிய வியாபார நடவடிக்கைகளால் ஏற்படும் விளைவுகளையும், முடிவுகளையும், சொத்துக்கள், பொறுப்புக்கள் போன்ற நிதி நிலைமையையும் சுலபமாகவும், எளிதாகவும் வேண்டிய அளவு விளக்கமாகவும் அறிவதற்காகச் செய்யப்படும் கணக்குகளையும், கூற்றுக்களையும் 'முடிவுக் கணக்குகள்' என்று கூறுவர்.

**முடிவுக் கணக்குகள்:-**

1. செய்கை (உற்பத்தி) க் கணக்கு
2. வியாபாரக் கணக்கு
3. இலாப - நட்டக் கணக்கு
4. இலாப - நட்டப் பகிர் கணக்கு
5. ஐந்தொகை

செய்கைக் கணக்கு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கும், இலாப - நட்டப் பகிர் கணக்குப் பங்குடமைக் கூட்டுப் பங்குத் தொகுதிக் கம்பெனி, கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற நிறுவனங்களுக்கே வேண்டியதாலும் இவ் விரண்டு பகுதிகளையும் இப்போது விடுத்து ஏனைய பகுதிகளை ஆராய்வோம்.

**வியாபாரக் கணக்கு:-**

இக் கணக்கு ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் நடந்த கொள்முதல், விற்பனை, திருப்பங்கள், கொள்முதற் செலவுகள் போன்ற வியாபார நடவடிக்கைகளைக் கொண்டு அக் காலத்துக்குரிய மொத்த இலாபம் அல்லது மொத்த நட்டத்தை அறிவதற்குச் செய்யப்படும் கணக்காகும்.

வியாபாரக் கணக்கின் பற்றுப் பாகத்தில் ஆரம்பச் சரக்கு மீதியைப் பதிதல்வேண்டும். பின் கொள்முதல் தொகையுடன், கொள்முதற் செலவுகளான கூலி, உள்வந்த வண்டிக்கூலி, கேள்வு தீர்வை போன்ற செலவுகளைக் கூட்டிவரும் தொகையிலிருந்து கொள்முதல் திருப்பல் (வெளித் திரும்பிய சரக்கு, திரும்பிச் சென்ற சரக்கு) தொகையைக் கழித்து வருந் தொகையை ஆரம்பச் சரக்கு மீதியுடன் கூட்டுதல் வேண்டும் இத் தொகையே விற்பனைக்கிருக்கும் சரக்கின் கொள்விலைப் பெறுமதியாகும். விற்பனைக் கிருக்கும் சரக்கின் கொள் விலைப் பெறுமதியிலிருந்து முடிவுச் சரக்கிருப்பு (இறுதிச் சரக்கிருப்பு)

பெறுமதியைக் கழித்தல் வேண்டும். இத் தொகை விற்ற சரக்கின் கொள்விலையாகும்.

விற்பனைத் தொகையை வியாபாரக் கணக்கின் வரவுப் பாகத்திலிட்டு அத் தொகையிலிருந்து விற்பனைத் திருப்பல் (உட்டிரும்பிய சரக்கு; திரும்பி வந்த சரக்கு விற்பனை வரவு) தொகையைக் கழித்தல்வேண்டும். இத் தொகை தேறிய விற்பனையாகும்.

விற்ற சரக்கின் கொள்விலையிலும் தேறிய விற்பனைத் தொகை கூடுதலாக இருப்பின் அக் கூடுதற் தொகை மொத்த இலாபமாகும். மொத்த இலாபத்தை வியாபாரக் கணக்கின் பற்றுப் பாகத்திலிட்டு வியாபாரக் கணக்கின் இரு பக்கத்தையும் சமப் படுத்தல் வேண்டும்.

தேறிய விற்பனைத் தொகையிலும் விற்ற சரக்கின் கொள்விலை கூடுதலாக இருந்தால் அக் கூடுதல் தொகை மொத்த நட்டமாகும். மொத்த நட்டத்தை வியாபாரக் கணக்கின் வரவுப் பாகத்திலிட்டு வியாபாரக் கணக்கின் இரு பக்கத்தையும் சமப்படுத்தல்வேண்டும்.

## சரக்கிருப்பு (முடிவு/இறுதி) விலை:-

கணக்குகளை முடிக்கும் திகதியில் உள்ள சரக்குகளின் பெறுமதியே இறுதிச் சரக்கிருப்பு மீதியாகும். இப் பெறுமதியை இரு முறைகளில் கணிக்கலாம், அவையாவன;-

1. புத்தகப் பெறுமதி:-

ஒவ்வொரு பொருளையும் கொள்முதல் செய்யும்போது அவற்றின் எண்ணிக்கையைப் புத்தகங்களில் பதிந்து விற்கும் பொருட்களின் எண்ணிக்கையையும் பதிந்து குறித்த திகதியன்று கொள் முதற் பொருட்களின் எண்ணிக்கையிலிருந்து விற்பனைப பொருட்களின் எண்ணிக்கையைக் கழிக்க வரும் தொகையைப் பொருளின் கொள்விலையாற் பெருக்க வரும் தொகையே முடிவுச் சரக்கிருப்பின் பெறுமதியாகும்.

(உ + ம)

### பொருள் இருப்பு ஏடு

| மாதம் | திகதி | மா | அளவு | விலை | கொள் | விற்பனை |
|---|---|---|---|---|---|---|
| தை | 1 | மீதி | மூடை | 35 | 50 | |
| | 5 | விற்பனை | ,, | | | 35 |
| | 10 | கொள்வனவு | ,, | 35 | 100 | |
| | 20 | விற்பனை | | | | 50 |
| | 28 | ,, | | | | 40 |
| | 31 | மீதி | | | | 25 |
| | | | | | 150 | 150 |

தை மாதம் 31-ம் திகதி 'மா' இருப்பு $35 \times 25 = 875$ ரூபா

இவ்விதம் விற்பனை செய்யும் பொருட்கள் ஒவ்வொன்றையும் பொருள் இருப்பு ஏட்டிற் பதிந்து வரும் மீதித் தொகைப் பெறுமதிகளின் கூட்டுத்தொகையே சரக்கிருப்பின் புத்தகப் பெறுமதியாகும். இவ்விதத்தில் மொத்த வியாபாரிகளே கணக்கெடுப்பார்கள்.

2. உண்மைப் பெறுமதி:-

கணக்கு முடிக்குந் திகதியன்று இருக்கும் பொருட்களைக் குறித்து அவற்றைக் கொள்விலையாற் பெருக்கி வருந் தொகைகளின் கூட்டுத் தொகையே சரக்கிருப்பின் உண்மைப் பெறுமதியாகும்.

சரக்கிருப்பின் புத்தகப் பெறுமதியைக் கணக்கிடும் விற்பனை நிலையங்களும் சரக்கிருப்பு எடுத்து உண்மைப் பெறுமதியையும் அறிவார்கள். சரக்கிருப்பின் உண்மைப் பெறுமதி, புத்தகப் பெறுமதி இரண்டிலும் உண்மைப் பெறுமதியே வியாபாரக் கணக்குக் கொண்டு செல்லவேண்டிய மீதியாகும். புத்தகப் பெறுமதியிலும் பார்க்க உண்மைப் பெறுமதி குறைவாக இருந்தால் வித்தியாசத் தொகை 'தற்குறைவாகும்'. உண்மைப் பெறுமதி புத்தகப் பெறுமதியிலும் கூடுதலாக இருந்தால் அத் தொகை மேலதிகமாகும்.

சரக்கிருப்பின் பெறுமதியைக் கொள்விலையிலேயே கணிப்பார்கள். சிலர் கொள்விலை, சந்தை விலை (விற்பனை விலை) ஆகிய இரு விலைகளிலும் கணிப்பார்கள். சந்தை விலை, கொள்விலை ஆகிய இரு விலைகளிலும் சரக்கிருப்பின் பெறுமதி தரப்பட்டிருந்தால் இவ் விரு விலைகளில் எது குறைவோ அதையே சரக்கிருப்பின் பெறுமதியாக எடுத்தல் வேண்டும்.

முடிவுச் சரக்கிருப்பின் பெறுமதியுடன் கொள்முதற் செலவுகள் சேர்க்கப்படாதிருந்தால் கொள்முதற் பெறுமதிக்குச் சரக்கு மீதியின் பெறுமதி என்ன விகிதமோ அவ் விகிதப்படி கொள்முதற் செலவைப் பிரித்து முடிவுச் சரக்கு மீதியுடன் சேர்த்தல்வேண்டும்.

சில வியாபார நிலையங்கள் எதிர்கால விலைவீழ்ச்சியின் அச்சத்துக்குப் பாதுகாப்புக்காகவும், இருப்புச் சரக்கில் அழிவு, சேதம், வற்றல் முதலிய குறைவு ஏற்படுவதற்குப் பாதுகாப்புக்காகவும், விற்பனையாகாது நீண்ட காலத்துக்குத் தேங்கியிருக்கும் பண்டங்களுக்காகவும், முடிவுச் சரக்கிருப்பின் கொள்விலையில் ஒரு வீதத்தைக் கழித்து வரும் மீதியையே முடிவுச் சரக்கிருப்பின் பெறுமதியாகக் கொள்கின்றன. இங்குள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பங்கீட்டுப் பொருட்களின் முடிவிருப்புக் கொள்விலையில் 5 வீதமும் ஏனைய பொருட்களின் முடிவிருப்புக் கொள்விலையிற் 10 வீதமும் கழித்து வருந் தொகையையே முடிவிருப்பின் பெறுமதியாகக் கொள்கின்றன.

## இலாப - நட்டக் கணக்கு:-

இலாப நட்டக் கணக்குத் தேறிய இலாபத்தை (இறுதி இலாபம், சுத்த இலாபம்) அல்லது தேறிய நட்டத்தை (இறுதி நட்டம், சுத்த நட்டம்) அறிவதற்காகச் செய்யப்படும் கணக்காகும்.

வியாபாரக் கணக்கில் மொத்த இலாபமிருப்பின் இலாப நட்டக் கணக்கின் வரவுப் பாகத்துக்கு இறக்குதல்வேண்டும். வியாபாரக் கணக்கில் மொத்த நட்டமிருப்பின் இலாப நட்டக் கணக்கின் பற்றுப் பாகத்தில் இறக்குதல்வேண்டும்.

வியாபார இலாபமல்லாத ஏனைய வருமானங்களான பெற்ற தரகு, பெற்ற வட்டி, வெற்றுப்பொருள் விற்பனை, முதலீட்டு வருமானங்கள், சில்லறை வருமானங்கள் போன்றவற்றை இலாப நட்டக் கணக்கின் வரவுப் பாகத்திற் பதிதல்வேண்டும்.

மொத்த இலாபத்தைக் குறைக்கக்கூடிய அல்லது மொத்த நட்டத்தைக் கூட்டக்கூடிய நடவடிக்கைகளை (செலவினங்களை) இலாப நட்டக் கணக்கின் பற்றுப்பாகத்திற் பதிதல்வேண்டும். மொத்த இலாபம் அல்லது மொத்த நட்டத்தை இலாப நட்டக் கணக்குக்கு இறக்குதல்வேண்டும்.

பற்றுப் பாகக் கூட்டுத்தொகையிலும் வரவுப் பாகக் கூட்டுத் தொகை கூடுதலாக இருப்பின் அவ் வித்தியாசத் தொகையை ''தேறிய இலாபம்'' எனக் குறிப்பிட்டுப் பற்றுப்பாகத்திற் பதிந்து கணக்கைச் சமப்படுத்தல் வேண்டும். வரவுப்பாகக் கூட்டுத் தொகயிலும் பற்றுப்பாகக் கூட்டுத்தொகை கூடுதலாக விருப்பின் அவ் வித்தியாசத் தொகையைத் ''தேறிய நட்டம்'' எனக் குறிப்பிட்டு வரவுப்பாகத்திற் பதிந்து கணக்கைச் சமப்படுத்தல் வேண்டும். 'தேறிய இலாபம்' அல்லது தேறிய நட்ட'த்தை மூலதனக் கணக்குக்குக் கொண்டுசெல்லல் வேண்டும்.

இலாப நட்டக் கணக்கில் பதியப்படுஞ் செலவினங்களை விற்பனைச் செலவு, நிருவாகச் செலவு, நிலையச் செலவு எனப் பிரித்துப் பதிதல் விளக்கமாகவும் தெளிவாகவும் இருக்கும். (தொடரும்)


# விற்பனையாளர்கள் தேவை!

வெற்றிமணி விற்பனை செய்ய

**முற்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை**

பிரதிக்கு 5 சதம் கமிஷன் கொடுக்கப்படும்.

**விளம்பரம் சேகரித்துக் கொடுப்பவர்களுக்கு**

20 சத வீதக் கமிஷன் கொடுக்கப்படும்.

ஆசிரியர்

# நம் சூழலே நம் விரோதிகள்!

—:— த. அரியரத்தினம் B. Sc. (Dip-in-Ed.) —:—

ஒருவன் நம்மை நேருக்கு நேர் நின்று தாக்கினால் அவன் விரோதியானாலும் நல்லவன். நம்மைத் தாக்க வருபவனிடமிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சி எடுக்கலாம். ஆனால், இந்தச் சூழலிலுள்ள எதிரிகள் கண்ணுக்குத் தெரியாதவை. மறைந்து நின்று தாக்கும் மாயம் கற்றவை. அவர்கள் யார் என்பது பற்றிய விபரம் தெரியாவிட்டால் நம்மை நாம் பாதுகாத்துக்கொள்ள முடியாது. ஒவ்வொரு சூழலாகப் பார்த்துத் தெரிந்துகொள்வோம்.

காற்று நமது உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒட்சிசனைக் கொண்டது. தென்றல் என்போம்; மந்த மாருதம் என்போம்; புயல் என்போம்; சூறாவளி என்போம். இந்த அடைமொழிகள் பலவுடைய காற்றுத் தன்னூடே பல கிருமிகளையும் அள்ளிவரும். கொடையிற் கர்ணன்போல் நமக்கு வாரி வழங்கும். இந்தப் பரிசில்களிற் சில கசம், சின்னமுத்து, போன்றவற்றின் காரணிகளாகும். நம்மை அடிக்கடி தாக்கும் பிடிசுரம், ஜலதோஷம் போன்றவற்றிற்குக் காரணமான வைரசுக்களையும் இந்தக் காற்றுத்தான் நமக்குத் தருகின்றது. நோய் வந்து வருந்துகின்றோம். வந்த காரணம் தெரிந்திலோம். எனவே, எம்மைத் தாக்கும் முதல் எதிரி மாசு படிந்த காற்றாகும்.

நீர்: உணவில்லாமற் பலநாள் வாழலாம். நீரில்லாமல் வாழமுடியாது. நுண்ணிய ஒரு கல உயிரினங்கள் முதல் மனிதன்வரை நீர் இன்றி வாழமுடியாது. கல கல என நகைத்துக்கொண்டு ஓடிவரும் ஓடை என்போம். வெள்ளியை உருக்கிவிட்டாற்போன்ற தெளிந்த ஊற்று என்போம். ஆனால், இந்த நீர் சுமந்துவரும் எதிரிகள் நம்மைப் படுக்கையிற் போட்டுவிடும். வாந்திபேதி, கழிச்சல் போன்ற நோய்களைக் கொண்டுவந்து தாக்கும் கிருமிகளை நமக்கு வழங்கும் நீரும் நம் சூழலிலுள்ள இன்னொரு எதிரி.

கண்ணுக்குத் தெரிகின்ற ஆனால் சிறியனவான நுளம்பு, ஈ, கொசு போன்றவை நமக்கு விளைவிக்கும் தீங்குகள் நமக்கு ஓரளவு தெரியும். மலேரியா, யானைக்கால் நோய், கண்ணோய் போன்றவையே இவ் வியாதிகள். நீர் தேங்கியுள்ள குப்பைகூளம் நிறைந்த சூழல்தான் இவற்றை விருத்தி செய்து நம்மைத் தாக்குகின்றது. விண்ணில் ஒளி வெண்மதியைப் பிடித்துவிட்டோம். ஆனாலும் இந்த சிற்றுயிர்களை நம்மாற் பூரணமாக அழிக்க முடியவில்லை. இந் நேரத்தில் டி.டி.ரி. பற்றிய சிந்தனை வருகின்றது. இந்த டி.டி.ரி. மருந்து தெளிப்பது நல்லதா கூடாதா என்ற பிரச்சினை அண்மையிற் பத்திரிகைகளில் விவாதிக்கப்பட்டது. உயிர்க்கொல்லி மலேரியாவை அழிக்க இது உதவியது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனாலும் இவற்றின் வல்லமை அவ்வளவோடு நின்றுவிடவில்லை. இவற்றின் நச்சுத்தன்மை பலகாலம் நிலையாகவிருந்து கழுவுப்பட்டு நீரோடு குளத்தையும், கடலையும் அடைகின்றது. காற்றோடு பரந்து இலைகளையும், கனிகளையும் அடைகின்றது. நீர்வாழ் உயிர்கள் இவற்றாற் தாக்கப்பட, அவற்றை உண்ணும் நாமும் தாக்கப்படுகின்றோம். இனிய கனிகளை உண்கின்றோம். அவற்றோடு டி.டி.ரி.யின் நச்சுத்

தன்மையையும் உண்கின்றோம். இந்தவிதமாகச் சூழல் நம்மைத் தாக்குகின்றது.


மேலே நாம் உயிருள்ள விரோதிகள் சிலவற்றைப் பார்த்தோம். உயிரில்லாத விரோதிகளும் உண்டா? ஆம். மேலே நாம் பார்த்தது நம்மை அடைந்து நம்மைத் தாக்குவது; இனிப் பார்க்கப்போவது நம்மை அடைந்தும் தாக்கும், நம்மைவிட்டு நீங்கியும் தாக்கும் சில உலோகங்களாகும். குருதி உற்பத்திக்குச் செம்பு மிக அவசியம். பத்திலொரு கிராம் போதுமானது. இந்த எல்லையைத் தாண்டிவிட்டால் நம்மை இறப்பில் நின்றும் காப்பாற்றிய அதே செம்பு நம்மை அளித்துவிடும்.

நாகத்தோடு (சிங்கு) சம்பந்தப்பட்ட கட்மியம் என்னும் உலோகம், ஈயம் போன்றவையெல்லாம் உயிர்கொல்லிகள். குழாய் நீர் குடிக்கும்போது இந்தக் குழாய்கள் ஆக்கப்பட்ட வெள்ளீயம் பூசப்பட்ட உலோகங்களுள்ள கட்மியம், ஈயம், பழுதடைந்த - நாட்பட்ட தகர டப்பாக்களிலுள்ள உணவை உண்ணும்போதும் ஈயம் நம்மை அடைந்து நமக்கு அளப்பரிய தீங்குகளை விளைவிக்கின்றன. தகரத்தில் அடைத்த மீன் உண்டு பலர் இறந்ததாகப் பத்திரிகையைப் பார்க்கின்றோம். இறப்புக்குக் காரணம் மீனல்ல. அவை இருந்த தகரத்திலுள்ள உலோக நஞ்சுதான் காரணம்.

இரும்பு இன்னொன்று. இது மனிதனுக்கு மிக அவசியம். ஒட்சிசனை உறிஞ்சி உடலுக்கு அனுப்புவதற்கு ஈமோகுளோபின் என்னும் ஒரு குருதி நிறச் சத்துக் குருதியிலுண்டு. இதன் ஆக்கத்திற்கு இரும்பு அவசியம். இந்த இரும்பு இல்லாவிட்டால் - ஈமோகுளோபின் இல்லை. அது இல்லாவிட்டால் - ஒட்சிசன் இல்லை. ஒட்சிசன் இல்லை என்றால் மூச்சுத் திணறல்; முடிவு மரணமுமாக இருக்கலாம்! ஆடு மாடுகளுக்கும் இந்த உலோகங்களாற் தீங்குண்டு. செலெனியம் என்ற உலோகம் கால்நடைகளிலுள்ள குளம்பை அழுகச் செய்கிறது. கோபால்ற்று உலோகம் இல்லாமை ஆடுகளுக்கு நோயைக் கொடுத்து இறக்கச் செய்கிறது.

பயிர்ச்செய்கையின்போது இடப்படும் பொஸ்பேற் உரத்தோடு கட்மியமும் இருந்து உணவிற் சேர்ந்துவிடுகின்றது. இந்த உணவை நாம் உண்டு தீங்கைத் தேடிக்கொள்ளுகின்றோம். இது உயர் குருதி அமுக்கத்தை ஏற்படுத்துகின்றது. வாழ்வின் காலத்தைக் குறுகச் செய்கின்றது. குரோமியம் என்ற உலோகமும் நம் உடலிற் காணப்படுகின்றதாம். இது குழந்தைகளிற் கூடுதலாகவும், முதிர்ந்தவர்களிற் குறைவாகவும் இருக்கின்றதாம். நீரிழிவு நோய்க்கு இன்சுலின் சுரக்கத் தடைப்படுவதுதான் காரணம். ஆனல், இன்சுலின் இருந்தபோதும் இந்தக் குரோமிய உலோகம் இல்லாவிட்டால் இன்சுலின் சக்தியற்றதாகி நோயை வருவிக்கின்றது என்ற ஒரு கருத்தும் நிலவுகின்றது. ஆனல் இதற்குப் போதிய சான்றுகள் இல்லை.

நம்மைத் தள்ளிநின்று வேடிக்கை பார்க்கும் நண்பர்கள் புகைக்கும் சிகரெட், சுருட்டுப் போன்றவைகூட நமக்கு விரோதிகளாகின்றன. எனவே நம்மைச் சுற்றிலும் விரோதிகள் இருந்துகொண்டே இருக்கின்றார்கள். நாம் வலுவிழந்து இருந்தால் நம்மைத் தாக்கிவிடுவார்கள். எனவே, குழந்தைகளே! நாம் எச்சரிக்கையுடனிருந்து நல்ல ஆரோக்கிய வழிகளைப் பயின்று, ஆரோக்கியமாக வளர்ந்து நமக்கும், நம் நாட்டுக்கும் உதவுவோமென்று இப் புத்தாண்டிற் தீர்மானஞ் செய்குவோம்!




# குழந்தைகளை வளர்ப்பதிற் பெற்ருேர் பங்கு

—:- கே. எம். பாறூக், மெயின் வீதி, பதியதளாவ. -:—

**ப**த்து மாதம் சுமந்து, பெற்றெடுக்கும் ஒரு குழந்தை தன் தாய்க்கு எவ்வளவு பெருமையைத் தேடிக் கொடுக்கிறது! அதனுல் அத் தாய் அடையுமின்பத்திற்கு எல்லையே கிடையாது. 'பெண் என்று சொல்லுபவள் என்ருவது ஒரு நாளைக்குத் தாயாவது உண்மை' எனக் கூறப்படுகின்றது. இந்த உண்மை பொய்யாகி வருவதையும் காணக் கூடியதாகவிருக்கிறது. சில பெண்கள் திருமணமாகியும் அந்தத் தாய்ப் பேறைப் பெருது சதா சிந்தித்தவண்ணம் இருப்பதையுங் காண்போம். இப்படிப்பட்டவர்கள் பிறரின் குழந்தைகள்மீது அளவு கடந்த அன்பு காட்டிக் குழந்தையில்லாக் குறையை ஒருவாறு தீர்த்துவருகிருர்கள்.

சில பெற்ருேர் தம் சொந்தக் குழந்தைகள்மீது அன்பில்லாமலும், அடக்கமில்லாமலும், மரியாதையில்லாமலும், நடந்துகொள்கின்றனர். தாய் தந்தையர்களுக்குக் குழந்தை மரியாதை செய்வதா? அன்றி, குழந்தைக்குத் தாய் தந்தையர்கள் மரியாதை செய்வதா? என்று கேட்கக் கூடும். உண்மையில் தாய் தந்தையர் குழந்தைக்கு எவ்வாறு மரியாதையும், மதிப்பும் அளித்து நடக்கிருர்களோ அதேபோற் குழந்தையும் அப்படிப்பட்ட மரியாதையையும், மதிப்பையும் கொடுக்கப் பழகிக்கொள்கிறது.

பிள்ளையைப் பெற்ருல் மாத்திரம் போதாது. அதைப் பேணி வளர்க்கவேண்டுமென்பதை ஒவ்வொரு தாய்மார்களும் கருத்திற் கொள்வார்களேயானுற் குழந்தையின் எதிர்கால வாழ்வு வளம்பெற்று வையத்திற் பதியுமென்பது திண்ணம். சிறுகுழந்தைகளின் உள்ளம் கள்ளங் கபடமற்றது; தெளிந்த நீரோடை போன்றது. அந்த மென்மை

யான உள்ளம் சிறு சாதாரண விஷயத்தையும் எளிதிற் பதியவைத்துக் கொள்ளும் சக்தி வாய்ந்தது. இவ்விடயம் பல பெற்றோர்களுக்குத் தெரியாமலும், புரியாமலும் இருக்கலாம். சில பெற்றோர்கள் குழந்தைகளைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு கெட்ட வார்த்தைகளைப் பேசுவதும், ஊர்வம்புகளை அளப்பதுமாக இருக்கின்றனர். இதனால் குழந்தையின் உள்ளம் எவ்வாறான பலனை எத்திக் கொள்ளும் என்பதைப் பெற்றோர்கள் அறிவது நன்று.

குழந்தைகளின் உள்ளம் எப்போதும் எதையாவது செய்யத் தூண்டிக் கொண்டேயிருக்கும். இதற்குப் பெரும்பாலும் அறியாத் தன்மையே காரணமாகும். குழந்தைகள் மேற்கொள்ளும் பழக்கங்கள் கெடுதலை வரவழைக்கக்கூடியதாகவிருந்தால் அதைச் செம்மைப்படுத்திக் குழந்தைகளின் எதிர்கால வளமான வாழ்வைச் சீரான பாதையிலமைக்கப் பெற்றோர்கள் முயலவேண்டும். ஒருசில குடும்பங்களில் கணவன் மனைவி இடையே சதா சண்டை சச்சரவுகள் நிகழ்ந்தவண்ணமே இருக்கின்றன. இன்று இது சர்வ சாதாரணமாகிவிட்டது. விபரம் தெரிந்த ஒரு குழந்தை இதைக் கண்ணுறும்போது தாய் தந்தை வழியையே பின்தொடர்கிறது. ஈற்றிற் குழந்தைமீது குற்றத்தைப்போட்டு அடிப்பதையும், திட்டுவதையும் நாளடைவில் மேற்கொள்வது வழக்கமாகிவிட்டது.

இப்படிப்பட்ட பொறுப்பற்ற தன்மையால் குழந்தைகளின் எதிர்காலம் பின்தங்குவதுடன் உலகில் ஒரு உயர்ந்த இடத்தைப் பெறுவதையும் இழந்துவிடுவது திண்ணம். இன்றைய குழந்தைகளே நாளைய நாடாளும் தலைவனும், ஏடு போற்றும் எழுத்தாளரும், நாடு போற்றும் நல்லவரும் என்பதை மனதிற்கொண்டு குழந்தைகளின் எதிர்கால இன்ப வாழ்வை உள்ளத்திலிருத்தி வளர்ந்துவரும் குழந்தைகளுக்கு அறிவு என்னும் உரத்தை அடியிலேயேவிட்டு உரிய காலத்தில் 'உயர்ந்த மனித'னாக்கி விடுவதே பெற்றோரின் பெரிதான கடமையாகும்!

-✶-

## உழைக்காமல் உயர முடியாது !

-:— எம். ஐ. எஸ். தாவூத், மட்டக்களப்பு. —:-

மனிதராகப் பிறந்த நாமனைவரும் உழைத்தால்தான் முன்னேற முடியும். உழைத்தால் நம் உடல் வலுப்பெறும்; மனம் நிம்மதியடையும். ஊக்கம் செயலாக வெளிப்படுவதையே உழைப்பு எனக் கூறுகிறோம். கடலுக்குள் விழுந்த ஒருவன் அவன் தப்புவதற்கு எவ்வாறு களைப்படையாமல் நீந்தவேண்டுமோ அவ்வாறு அவன் நீந்தவேண்டும். அவன் களைப்படைந்தால் நீரில் மூழ்கிவிடுவான். இவ்வாறே,

வாழ்க்கையென்னும் பெருங்கடலில் ஒருவன் உழைப்பதற்குச் சோம்பற்பட்டுச் சும்மா இருக்கத் துணிவானுனல் அவன் நாளுக்கு நாள் கீழே போவதைத் தவிர வேறு வழியேயில்லை.

இக் காலத்திற் சில பெற்றோர்கள் பாடுபட்டுழைத்து அதைத் தமது பிள்ளைகளுக்காக விட்டுவிட்டுச் செல்வதைக் காணலாம். இந்த நிலை மாருத வரையிற் பிள்ளைகள் இளம் சமூகங்கள் தொடர்ந்து சோம்பேறிகளாக இருக்க இடமுண்டு என்பதிற் சந்தேகமில்லை. ஒவ்வொருவரும் அவரவருக்காகவே உழைக்கவேண்டும். இதனுல் நாடு செழிப்படையும்; செல்வம் பெருகும்; பஞ்சம் நீங்கும்; என்பதை மறுக்கமுடியாது.

எனவே, நாம் நமக்காக உழைக்கப் பழகிக் கொண்டால் வாழ்க்கையிற் தோல்வியில்லை என்பது வெள்ளிடைமலை.

**

## பொன்மொழிகள்

— தொகுத்தவர் செல்வி பொ. தெய்வநாயகி, புதுக்குடியிருப்பு. —

1. ''தீரச் செயல்களிலிருந்து தயாராகும் அத்தர்தான் புகழ்''
2. ''எனக்குத் தெரிந்தது ஒரேயொரு விஷயந்தான். அது என்னவென்ருல் 'எனக்கு ஒன்றுமே தெரியாது' என்பதுதான்''
3. ''உன்னை நீ அறிவாய்''

4. ''நான் கொடியவனுக இருக்க வேண்டியிருக்கின்றது; இனியவனுக இருப்பதற்காக!''

5. அறிவாளியின் இதயம் ஒரு அழியா விருந்து.''

6. ''இன்றைய சிறுர்கள்; நாளைய பிரஜைகள்.''

7. ''உன் உள் மனதிற்கு அழகு கொடு; ஏனெனில் எனக்கு வெளி அழகு தேவையில்லை. அறிவாளிக்குச் செல்வத்தைக் கொடு; ஏனெனில் எதுவும் தேவையிராதவனே கடவுளைப்போல இருக்கமுடியும்.''

8. ''நீ வாழ்வைச் சுலபமாகக் கழிக்க இரு வழிகளுண்டு. கேட்பது எல்லாவற்றையும் நம்பு; அல்லது கேட்பது எல்லாவற்றையும் சந்தேகி. இரு வழிகளும் சிந்திக்க இடம் வையாது.''

* *

# தமிழின் விசித்திரம்

—:- செல்வி சிவயோகம் கதிரிப்பிள்ளை -:—

முத்துத்தம்பி அவர்கள் வழக்கம்போல நெற்றியிற் சந்தனப் பொட்டுடன், கையிற் குடையுடனும், புத்தகத்துடனும் குதூகலத்துடன் விரைகின்றுர் ஒரு கூட்டத்திற் பேசுவதற்காக. அவர் மேடையிலேறியதும் கூட்டத்திலிருந்த யாவரும் ஒருவரையொருவர் பார்த்து ஆரவாரப்பட்டனர். பேச வந்திருப்பவர் இன்று எதை மனதிற்கொண்டு பேசப் போகின்றுர் என்பதே அவர்களிடம் உண்டாகிய அவா. சிறிது நேரத்திற் கூட்டத்திலுள்ளவர்கள் அமைதியடைந்தனர். முத்துத்தம்பியின் குரல் கலீரென எழுகிறது. வழக்கப்படி ''நமப் பார்வதிபதே'' எனக் கூறிக் கூட்டத்தை ஆரம்பித்தார்.

கடவுளின் தன்மைகளையும், மக்களின் கொள்கைகளையும் கூறிவிட்டு ''ஓர் ஆசிரியர் கூறுகிறுர்' எனத் தொடங்கினுர்:

'தாவாரம் இல்லைத் தனக்கு ஒரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி குதம்பாய்
தேவாரம் ஏதுக்கடி?'

இப் பாட்டுச் சிறந்ததல்லவா?'' என்றதும் கூட்டத்திலிருந்தவர்களிற் சிலர் ''நாங்கள் தேவாரத்தைப் பாடித்தான் என்ன? இறைவனைப் புகழ்ந்து பாடிக்கூட எங்களுக்கென ஒரு தாவாரமோ வீடோ இருக்க உண்டா - இல்லையே!'' என்று ஆமாப் போட்டனர். இன்னுஞ் சிலர் ''தாவாரம் வீடு இல்லாதவர்கள் தேவாரம் பாடக் கூடாதா?'' என்று கூறியபடி முத்துத்தம்பியை அடிக்க எழுந்தனர். முத்துத்தம்பி ''எல்லோரும் அமைதியாயிருங்கள்; மன்றாட்டமாய்க் கேட்கிறேன். யான் கூறியதன் கருத்து இது; அதாவது, தா என்றால் துன்பம்; வாரம் என்றால் பங்கு; வீடு இல்லை என்றால் நான் என்ற ஆணவம் விட்டபாடில்லை. ஆதலாற் துன்பத்திற் பங்கு கொள்ளாதவர்களும், நான் என்ற அகங்காரம் நீங்காதவர்களும் எதற்காகத் தேவாரம் பாடவேண்டும் பெண்ணே?'' என்று கூறியதும் யாவரும் வெட்கித் தலை குனிந்தனர்.

இதன்பின்னர் முத்துத்தம்பி சிறிது உற்சாகமடைந்தவராய் ''திருநீறிட்டார் கெட்டார்'' என்றார். கூட்டத்திலிருந்தவர்களிற் சிலர் 'இதற்கும் ஏதும் கருத்துச் சொல்லுவார் முத்துத்தம்பி' என்று முணுமுணுத்தனர். ஒரு சிலர் முன்னேற்பட்ட வெட்கத்தாற் தலைநிமிராது இருக்கின்றனர். சிலர் ''ஆம். திருநீறு இட்டுக் கெட்டோர் பலர்தான்' என்கின்றனர். முத்துத்தம்பி ''இதன் கருத்து...... எனத் தொடங்கினார்.

திருநீறு + இட்டு + ஆர் + கெட்டார் எனப் பிரித்து திருநீறு இட்டு யார் கெட்டவர்கள்? ஒருவரும் கெடவில்லையே என்று கூறியதும் யாவரும் சிரித்தனர். இன்னும், ஒரு உண்மையைக் கூறி என் பேச்சை முடிக்கிறேன். 'கருவாடு தின்றார் கைலாயம் சென்றார்'' என்றார் முத்துத்தம்பி. இதைக் கேட்ட சிலர் ''கருவாடு தின்றாற் பாவமில்லை. அதற்கு உயிர் இல்லையல்லவா?'' எனச் சமாதானம் கூறினர். முத்துத்தம்பி ''கருவாடு தின்று யார் கைலாயம் சென்றார்? ஒருவரும் கைலாயம் செல்லவில்லையே!'' என்றார். கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**




## கற்கை நன்றே

அக்கரை மீரான்

சுவைக்கச் சுவைக்கச் சுவை குன்றா
சுனையாய் கல்வி ஊருதோ
சுவைக்க இன்றே இள நெஞ்சில்
சுவையாம் கல்வி நிலையாகும்

எடுக்கக் குறையா கருவூலம்
எங்கும் அழியாப் பெருஞ்செல்வம்
துடுக்குப் பருவ நெஞ்சினிலே
துணைத்திடக் கல்வி வளமாகும்

படித்தவர் மனதில் அருளுண்டு
படியார் இடத்தே இருளுண்டு
முடித்தவப் பயனாய் வரும்ஞானம்
முனைவார் நன்கு பெறும்ஞானம்

கல்வித் தலமே எம்கோயில்
கற்று விப்போன் நம்தெய்வம்
விள்ளு வதெல்லாம் நற்கல்வி
விழுப்பம் அதனால் கற்போமே.

# முழக்கம்!

எஸ். ஹபீப்பு முகம்மது, மட்டக்களப்பு.

வெற்றிமணி யோசையெங்கும் முழங்கிடவேண்டும்
வீறுநடை போட்டுப்புகழ் விரித்திடவேண்டும்
கற்றவற்றை வாழ்விலென்றும் கைக்கொளவேண்டும்
காலத்தாயின் மடியினிலே களித்திடவேண்டும்.
(வெற்றிமணி)

நாட்டினிலே சிறந்ததுநம் நற்றமிழ்ஏடே
நல்லறிஞன் வள்ளுவஞர்தந் துள்ளநூலே
வீட்டிலெங்கும் கொலுவிருக்க விரும்பிவிட்டாலே
வேதனைகள் ஓடுமடாவெற்றியினுலே. (வெற்றிமணி)

கற்றவரும் மற்றவரும் களிப்படைகுவார்
கவலேஓடி களிப்புத்தேடி நாடியதாலே
தொற்றுநோயாம் சோம்பல்கூடத் தூரஓடுமே
தூய்மைஒளி வாழ்வினிலே ஜோதிவீசுமே!
(வெற்றிமணி)

# பொங்கிடும் இன்பம்

—:-: கவிஞர் அமலன் :-:—

பொங்கும் இன்பம்
எங்கும் தங்கிட
பொலிந்தது பொங்கலடா - புகழ்
தங்கும் விதத்தில்
புதுமை மலர்ந்து
மலிந்தது இன்பமடா!

மங்கை முகத்தில்
மஞ்சள் நிறத்தில்
தங்கிடும் இன்பமடா - வயல்
செந்நெல் கரும்பில்
செழிக்கும் வனப்பில்
சிறப்பது பொங்கலடா!

உழவன் தோளில்
உயர்ந்த உழைப்பில்
எழுவது பொங்கலடா -வளர்
பகைமை உணர்ச்சி
பாரில் கழித்துச்
சுகிப்பது இன்பமடா!

## தம்பி...!

— நெல்லை ஐ. நடேஸ், ம. ம. வித்தியாலயம், நெல்லியடி.—

நாவன்மை வேண்டுமடா தம்பி — அதை
நானிலமும் போற்றட்டுமே தம்பி
பாவன்மை வேண்டுமடா தம்பி — அதைப்
பாவலரும் போற்றட்டுமே தம்பி.

ஏர்பிடிக்கத் தயங்காதே தம்பி — அதை
எல்லோர்க்கு மெடுத்துரைப்பாய் தம்பி
நேர்மைவழி தப்பாதே தம்பி — அதை
நெஞ்சிலே நிறுத்திடுவாய் தம்பி.

தமக்கென்றொரு தொழில்வேண்டும் தம்பி — உண்
தரணியே போற்றுமடா தம்பி [டேல்
நமக்கென்றொரு தனிநாடு வேண்டும் — இருந்தால்
நாம்யார்க்கு மஞ்சிடோம் தம்பி!

## அழைப்பு!

எம். எல். ஜலால்தீன், பொத்துவில்.

அன்பை மதித்திடாப் பேர்களை
அகத்துள் நிறுத்திட லாகுமோ?
பண்பைப் புரிந்திடா தோர்களை
பாச உருவெனக் கொண்டிடில்
உண்மையின் துன்பமே! தேருவோம்
உள்ளத்தில் ஊறிடும் அன்பினைக்
கண்ணெனப் போற்றிடா மாந்தரும்
கலியுகப் பேய்கள்தான் காண்கிறோம்!

தூய நிலையில் நிறைந்திடும்
துன்ப இருளை மறைத்திடும்
நேய உணர்வை வளர்த்துமே
தீங்கைக் குறைத்திடும் அன்பினால்
கால மிதிலே களிக்கலாம்
கவலை யாவையும் நீக்கலாம்
ஆய அலைகளில் ஊறியே
அன்பைப் பெருக்குவோம் வாரீரோ?

# வெட்கமடைதல் (50)

மு. க. சுப்பிரமணியம்

மிதுனபுரம் என்ற ஊரிலே மீனுட்சி என்ருெரு பாட்டி இருந்தாள். இவளுக்குக் கணவன் இல்லை. ஒரே ஒரு மகன் இருந்தான். இருந்தும் அவனுல் உதவி இல்லை. அவன்திரு மணஞ் செய்து தானும் தன்பாடுமாக இருந்தான். மீனுட்சி தன் சிறு குடிசையில் தோசை சுட்டு விற்றுச் சீவித்து வந்தாள்.

தினமும் மகனின் பிள்ளைகள் மீனுட்சியின் குடிசைக்குக் காலை ஆறு மணிக்கே சென்றுவிடுவார்கள். தோசை சுடச் சுட அவர்கள் எடுத்துத் தங்கள் வயிற்றை நிரப்புவார்கள். மீனுட்சி என் செய்வாள்? தான் பெற்ற மகனின் பிள்ளை கள் என்ற எண்ணம் அவளுக்கு. ஆனுல் மகனுக்கோ தன் னைப் பெற்ற தாய் என்ற எண்ணமில்லை. தாய்க்குத் தனே பிள்ளைகளிற் பாசமுண்டு.

ஒரு நாள் மீனுட்சி அயலிலே உள்ள ஒருவர் நூறு தோசை தேவை எனக்கூறியதால் அதிகாலையிலேயே எழுந்து தோசைகளைச் சுடத் தொடங்கினுள். கஷ்டப்பட்டுச் சுட்டு முடித்து நூறு தோசையை எண்ணி ஒரு பெட்டியில் வைத் தாள். அங்கே முன்னதாகவே தோசை சாப்பிட வந்திருந்த மகனின் மூத்த மகன் மாறன் பாட்டி தோசைகளை எண் ணும்போது குடிசையின் ஒரு மூலையில் போய்ப்படுத்துக் கொண்டான். சிறிது நேரத்தால் மீனுட்சி விறகு எடுப்ப தற்கு வெளியே சென்ருள். மாறன் எழுந்து பெட்டியில் இருந்த தோசைகளில் இரண்டை எடுத்துக்கொண்டு முன் போலப் படுத்துக்கொண்டு சீக்கிரம் சாப்பிட்டு முடித்தான். பாட்டி திரும்பிவந்து தன் வேலையைத் தொடர்ந்தாள். நூறு தோசைகளையும் வாங்குவதற்கு அயலவர் வந்தார். மீனுட்சி பெட்டியிலிருந்ததை அவரை எண்ணும்படி கூறினுள். எண் ணியபொழுது இரண்டு குறைவாக இருக்கிறது என்ருர். மீனுட்சி மாறனைப் பார்த்தாள். இதேசமயம் மாறனும் என்ன நடைபெறுகிறது என்பதைக் கடைக் கண்ணுற் பார்த்தான். தானே இரண்டை எடுத்துவிட்டதைப் பாட்டி திட்டமாக அறிந்துவிட்டாளென்பது மாறனுக்குத் தெரி யும். மாறனுக்குத் தான்செய்த செய்கையால் ஏற்பட்ட வெட்கத்தை மறைக்க முடியவில்லை. ''பாட்டி நான் இரண்டு எடுத்தேன்'' என்ருன். மீனுட்சி இரண்டு தோசையைச் சேர்த்து நூறைக்கொடுத்து அனுப்பிவிட்டு மாறன் 'தானே வெட்கப்படக் கூடிய எதையும் எவரும் செய்யக்கூடாது' என்று புத்தி கூறினுள்.

# நேயர் குரல்

செல்வி ஸ்ரீகுமாரி கதிரித்தம்பி
இருபாலை, கோப்பாய்.

'வெற்றிமணி' ஆசிரிய!

சென்ற ஆண்டுக்குரிய வெற்றி மணிகள் யாவும் சகோதரன் சிவாநந்தசர்மா மூலம் கிடைத்தது. மட்டற்ற மகிழ்ச்சி. வரி வரியாகச் சுவைத்தேன். ஒரே தமிழ் மணம். ஈழத்திற் சிறந்த படைப்புக்களில் ஒன்றுன வெற்றி மணியே! நீ பல்லாண்டு காலம் வாசகர்களின் இதய பீடத்தில் அமர்ந்து மாதமிருமுறை டாண்! டாண்! என ஒலித்து வளரும் இளம் எழுத்தாளர்களின் அறிவைப் பெருக்கி ஆர்வத்தை ஊட்டித் திக்கெட்டும் வெற்றியுடன் ஒலித்துவர வாழ்த்துகின்றேன். விரைவில் சந்தா அனுப்பி வைப்பேன்.

N V. S. சுந்தர் சிவா,
இல. 35, நியூசில்க் ஸ்டோர்,
மகாவெவ.

கடல் கடந்து ஒலிக்கும் வெற்றி மணியே! கரம் கிடைத்தால் இதயம் மலர்ந்திடுமே! இளைஞர்களை வாழவைப்பாய்; வாழவும் வழி காட்டுவாய்; முதியவர்களையும் கவர்ந்திடுவாய்; சிறுவர் கரங்களிற் தவழ்ந்திடுவாய். தமிழ் வளர்ந்திட, புகழ் ஓங்கிட அழகுடன் மலர்வாயே!

S. M இராமன்,
வள்ளியம்மை பாங்,
கொரனுட்டுக்கருப்பூர், P.O.
கும்பகோணம் – வழி,
தஞ்சை.

15-11-69 வெற்றிமணி கிடைத்தது. வெற்றிமணியில் வெளிவரும் பேனுநண்பர்சங்கம், மாணவர் மன்றம் ஆகியவற்றிஞல் உலகிலுள்ளவர்களின் அறிமுக முண்டாகும். கடிதத் தொடர்பு கொண்டு நல்ல பழக்க - வழக்கங்களை அறியமுடியும். வெற்றிமணி மூலம் எனது அறிவைப் பெருக்கத் தோழர் - தோழியர்களைக் கடிதத் தொடர்பு கொள்ளச் செய்யும்படி பணிவாக வேண்டுகிறேன். சாரதாவின் 'துய்யநற் சிலையும் வாழ்க' திக்குவல்லை கமாலின் 'வானமே' தாங்கள் எழுதிய 'பெருமைப் பேச்சு' ரமணியின் விஞ்ஞானமும் - மனிதவாழ்க்கையும், தெய்வநாயகி தொகுத்த மணிமொழிகள் என்பன பாராட்டுக்குரியன. வெற்றி மணியைப் படித்துப் பாராட்டியவர்கள் இங்கு பலர்.

வளர்க வெற்றிமணி!

K. K. பிள்ளை.
வள்ளுவர் நாடக மன்றம்,
பிளாக் பூல்,
நுவரேலியா.

'வெற்றிமணி' ஆசிரிய!

சந்தக்கவிமணி சி. சின்னையா புலவர் வெற்றிமணியை எனக்கு அறிமுகஞ் செய்துவைத்தார்கள். 'கணக்கியலுக் கோர் அறிமுகம்' மிகவும் சிறந்த அம்சமாகும். பகுத்தறிவுடைய பாலர் பலர் எழுதும் பண்புள்ள விடயங்களைப் பாலர் மலர் தாங்கி வருவது மகிழ்ச்சிக்குரியது. பாடசாலை மாணவர்களுக்கு மிகவும் பயன் உடையவை. பேனுநண்பர் சங்கம் உலகின் பல பாகங்களிலுமுள்ளவர்களுடன் இன - மத வேறுபாடின்றி நட்புக் கொள்ள வழி வகுக்கின்றது. வெற்றிமணி வீறு நடை போட்டுத் திக்கெல்லாம் தீந்தமிழாம் எங்கள் மொழி சிறக்க, ஒலிக்க வாழ்த்துகிறேன்.

# இரு நூல்கள்

யாழ்ப்பாணப் பகுதியிற் சமீபத்தில் இரு இலக்கிய விழாக்கள் நடைபெற்றன. இவை இரண்டுமே யாழ். இலக்கிய வட்டத்தினரால் நடாத்தப்பட்டன. இரு விழாக்களும் இரு நூல்களை வெளியிட்டுவைப்பதற்காக எடுக்கப்பட்டன. மாநகரசபை மண்டபத்தில் 31-1-70இல் நடைபெற்ற விழாவிற் பிரபல எழுத்தாளர் யாழ்வாணன் எழுதிய 'அமரத்துவம்' என்ற நூல் வெளியிடப்பட்டது.

அமரத்துவம் ஒரு நல்ல படைப்பு. அருமையான கதைகள் பன்னிரண்டைக் கொண்ட இந்நூல் அழகாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கதையும் போட்டி போட்டுக்கொண்டு உள்ளத்தைஈர்க்கும் தன்மையதாயுள்ளது. பலவிடங்களில் உணர்ச்சிப் பிரவாகக் கண் ஊலக்கத்தில் முடிகின்றது. விழாவுக்குத் தலைமை வகித்த கவிஞர் வி. கந்தவனம் குறிப்பிட்டதுபோல் பண்பாட்டைப் போற்றி மனப் பக்குவத்தை வளர்க்கவல்ல கதைகள் கொண்டது அமரத்துவம்.

குரும்பசிட்டி, சன்மார்க்க சபை மண்டபத்தில் 5-2-70இல் நடைபெற்ற விழாவில் பிரபல நாடகவாசிரியர் ஏ. ரி. பொன்னுத்துரை எழுதிய 'நாடகம்' என்னும் ஓரங்க நாடக நூல் வெளியிடப்பட்டது.

புதுமையான தலைப்பைத் தாங்கிய இந் நூல் பல வழிகளிற் சிறப்புடைத்து. ஈழத்தில் ஓரங்கநாடக உத்திமுறைகள் நன்கு பயன்படுத்தி வெளியிடப் பெற்ற முதல் சமூக ஓரங்க நாடகம் இது என்று வெளியீட்டுரை செய்த கலாநிதி சு. வித்தியானந்தன் குறிப்பிட்டது கவனிக்கத் தக்கது.

நாடகம் ஓர் உன்னத படைப்பென்பதனை நாடகத்தை நடித்துக் காட்டிய ஏ. ரி. பி. குழுவினர் நிரூபித்துவிட்டனர். மிகவும் விறுவிறுப்பாகவும், வெவ்வேறு குணவியல்பு வாய்ந்த பாத்திரங்களால் கலகலப்பாகவும் இருந்த நாடகம் ஈழத்தில் நாடகக் கலை வளர்ச்சி அடைந்த உண்மையை எடுத்துக்காட்டுகின்றது.

— ஆசிரியர்

* *

## மாணவர் மன்ற அங்கத்தவர்கள்

75. எஸ். ஓரியண்டல்ராசா, சிவானந்தா விடுதி, கல்லடி, உப்போடை.
76. சீ. கேதீஸ்வரன், கோவில் வீதி, இணுவில்.
77. மும்தாஜ் அப்பாஸ், 72, கிருங்கதெனிய, மாவனெல்லை.

# கட்டுரைப் போட்டி முடிவுகள்

1. பாடசாலை மாணவர் (16 வயதுக்கு உட்பட்டவர்)
மகாலிங்கம் இளங்கோவன், ம. ம. வித்தியாலயம்,
நெல்லியடி, கரவெட்டி.

2. பாடசாலை மாணவர் (16 வயதுக்கு மேற்பட்டவர்)
செல்வி மீனும்பாள் முத்தையா
ஹைலண்ட்ஸ் கல்லூரி; அட்டன்.

3. பாடசாலையிற் படிக்காதவர் (22வயதுக்குட்பட்டவர்)
செல்வி தெய்வநாயகி பொன்னுத்துரை
இல. 32, வள்ளிபுனம், தேவி புரம், வ/புதுக்குடியிருப்பு.

**குறிப்பு:-** பி. கிருஷ்ணனந்தன், ம. ம. வித்தியாலயம், நெல்லியடி. இவர் 16 வயதுக்குட்பட்டவர். 'தைப் பொங்கல்' என்ற தலைப்பில் எழுதாது 16வயதுக்கு மேற்பட்டவர்களுக்குரிய தலைப்பில் எழுதியுள்ளார். இவருக்கு அன்பளிப்பாகப் புத்தகப் பரிசு கொடுக்கப்படும். — ஆசிரியர்

# மணமக்கள் வாழ்க!

| மணமகன் : | மணமகள் : |
|---|---|
| கந்தையா சத்தியமூர்த்தி<br>குரும்பசிட்டி,<br>தெல்லிப்பழை. | சாந்தகுமாரி பாலசுந்தரம்<br>வீமன்காமம்,<br>தெல்லிப்பழை. |
| பொன்னம்பலம் இராஜசேகரம்<br>குரும்பசிட்டி,<br>தெல்லிப்பழை. | தவமணி நடராசா<br>குரும்பசிட்டி,<br>தெல்லிப்பழை. |
| தம்பிப்பிள்ளை சிவயோகேந்திரம்<br>குரும்பசிட்டி.<br>தெல்லிப்பழை. | ராதா அப்பையா<br>குரும்பசிட்டி,<br>தெல்லிப்பழை. |
| கயிலாயபிள்ளை திருச்செல்வம்<br>குரும்பசிட்டி,<br>தெல்லிப்பழை. | சரோஜினிதேவி தம்பையா<br>சுண்டுக்குழி,<br>யாழ்ப்பாணம். |
| கந்தையா கனகசபை<br>குப்பிளான்,<br>சுன்னுகம் | தங்கமணி பொன்னுத்துரை<br>குப்பிழான்,<br>சுன்னுகம். |
| செல்வன் சுந்தரலிங்கம்<br>படித்தவாலிபர் திட்டம்<br>திருவையாறு. | செல்வி நாகரத்தினம்<br>ஆஸ்பத்திரி வீதி,<br>மூளாய். |

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது Q. B. 3033

15-4-70 புதுவருடத்துடன்

# "வெற்றிமணி"

சிறுவர் மாத இதழ்

## பல புதிய அம்சங்களுடன்

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்.

முகவரி மாற்றம்

15-3-70 வெற்றிமணியில்

வெளியிடப்படும்.

பிரதிகளுக்கு இன்றே பதிவுசெய்யுங்கள் — ஆசிரியர்

இப்பத்திரிகை சக்தி அச்சகத்தினருக்காக, பொ. இராசரத்தினம் அவர்களால் முள்ளியவளை தண்ணீரூற்றிலுள்ள சக்தி அச்சகத்தில் 15-2-70 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.